# பொருளியல்

## தேசிய கணக்கீட்டின் முக்கியத்துவம்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**தேர்ச்சி 5**

**தேர்ச்சி மட்டம் 5.7**

## தேசிய கணக்கீட்டின் முக்கியத்துவம்

1) பொருளாதாரத்தின் செயலாற்றுகை மதிப்பிடப் பயன்படுதல்

2) பொருளாதார வளர்ச்சியை அளவிட உதவுதல்

3) தனிநபர் தேசிய உற்பத்தியை அளவிடல்

4) பொருளாதாரக் கட்டமைப்பின் பண்புகளை அறிந்து கொள்ள உதவுதல்

5) தொழிற்பாட்டின் அடிப்படையில் வருமானப் பங்கீட்டின் தன்மையை வெளிப்படுத்த உதவுதல்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

6) சர்வதேச நாடுகளுடன் ஒப்பிட உதவுதல்

7) பொருளாதாரத் துறைகளுக்கிடையேயான சார்பு ரீதியான தொடர்பை விளக்கிக் கொள்ள முடிதல்

8) வளங்களின் கட்டமைப்பையும் அதன் பயன்பாடுகளையும் விளங்கிக் கொள்ள உதவுதல்

9) பொருளாதார முகாமைத்துவம் சம்பந்தமான தரவுகள் கிடைத்தல்

10) பேரினப் பொருளாதார மாறிகளின் நடத்தைகளை எதிர்வு கூறமுடிதல்

## தேசிய கணக்கீட்டின் வரையறைகள்

1) பொருளாதாரத்தின் சில பயன்தரு கொடுக்கல் வாங்கல்கள் தேசிய கணக்கீட்டில் உள்வாங்கப்படுவதில்லை


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2) தேசிய கணக்குகளில் மறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சட்டரீதியற்ற பொருளாதார நடவடிகைகள் உள்ளடக்கப்பட்டாலும் முறையான கணிப்பீட்டிற்கு உட்படாமை , தகவல் வழங்கலை தவிர்த்துக்கொள்ளல் , சட்டதிட்டங்கள் பேணப்படாமை காரணமாக மறைவான பொருளாதார நடவடிக்கை சம்பந்தமான தரவுகள் கிடைக்காமற் போகின்றன

3) வீட்டு மனையாளின் சேவை தேசிய கணக்கீட்டில் உள்ளடக்கப்படாமை

4) உற்பத்தி காரணமாக சூழலில் ஏற்படும் பாதிப்புகள் உற்பத்திக் கணக்குகளில் சேர்க்கப்படுவதில்லை

5) அரசாங்க சேவை வினைத்திறனில் ஏற்படும் மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்படாமை

6) ஓய்வு நேரத்தில் நபர்கள் அடையும் மகிழ்ச்சி தேசிய கணக்கீட்டில் உள்ளடக்கப்படாமை

7) அரச கடனுக்கான வட்டி சேர்த்துக் கொள்ளப்படாமை

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பெருளியல்இ(யா.்.அருணோதயாக் கல்லூரிஇஅளவெட்டி)
கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்இ(கிளி.்.கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

8) நீண்டகாலப் பயன்பாட்டினை கொண்ட சில நுகர்வுப் பொருட்கள் முதலீட்டுப் பொருட்களாகக் கருதி தேசிய கணக்குகளில் உள்ளடக்கப்படாமை

9) உற்பத்தி நடவடிக்கையின் போது சூழலுக்கு ஏற்படும் நன்மைகள் கவனத்தில் கொள்ளப்படாமை

## பசுமைத் தேசிய கணக்கீடு

உற்பத்தி நடவடிக்கைகளுக்காக சுற்றாடலுக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் பாதிப்புகள் என்பவற்றைக் கணக்கிட்டு தேசியகணக்கீட்டினை தயாரித்தல் பசுமைத் தேசிய கணக்கீடாகும்

பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பீடுகையில் உற்பத்தி நடவடிக்கையின் போது சுற்றாடலுக்கு ஏற்படும் நன்மைகள் கூட்டப்படுவதோடு சுற்றாடலுக்கு ஏற்படும் தீமைகள் அல்லது பாதிப்புகளின் பெறுமதி கழிக்கப்படுகிறது


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk